ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**தொடர்பூட்டல் திணைக்களம்**
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

---

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | வங்கி மேற்பார்வைத் திணைக்களம் |
| திகதி | 29.12.2008 |

### பொதுமக்களுக்கான அறிவித்தல்

## செலான்வங்கி பிஎல்சி மற்றும் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டை உறுதிப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட வழிமுறைகள்

செலிங்கோ குழுமத்தின் அண்மைக்கால நிகழ்வுகள் மற்றும், வைப்புக்கள் மீளப்பெறுதல் மற்றும் திரவத்தன்மைப் பிரச்சனைகள் தொடர்பாக செலான் வங்கி பிஎல்சி ஆல் எதிர்கொள்ளப்படும் நெருக்கடிகள் தொடர்பில் நாணயச்சபையின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. செலான் வங்கி பிஎல்சி இன் நெருக்கடிகள் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டுக்கு உள்ளார்ந்த வளமுள்ள ஆபத்தை வெளிப்படுத்தியது. எனவே, நிதியியல் முறைமையை உறுதிப்படுத்துவதற்கு உடனடி வழிமுறைகள் எடுக்கப்படவேண்டிய தேவை என்ற கருத்தை நாணயச்சபை கொண்டுள்ளது. இது தொடர்பாக 1949ஆம் ஆண்டின் 58ஆம்இலக்க நாணயச்சட்ட விதியின் 30 (1) ஆம் பிரிவின் கீழ் பின்வருவனவற்றை உடனடியாக மேற்கொள்வதற்கு நாணயச்சபை தீர்மானித்துள்ளது.

PDF created with FinePrint pdfFactory trial version http://www.pdffactory.com

(அ) செலான் வங்கி பிஎல்சி இன் சகல தற்போதைய பணிப்பாளர்களின் பணிகளை இடைநிறுத்துவதற்கு ;

(ஆ) செலான் வங்கியின் வியாபாரத்தை தொடர்ந்து மேற்கொள்வதற்கு இலங்கை வங்கியை நியமிப்பதற்கு ;

(இ) செலான் வங்கி பிஎல்சி இன் புதிய பணிப்பாளர் சபையை நியமிப்பதற்கு இலங்கை வங்கியை வேண்டிக் கொள்வதற்கு;

(ஈ) எந்தவித குறுக்கீடின்றி செலான் வங்கி பிஎல்சி இன் தற்போதைய தலைமை நிறைவேற்று அலுவலர் மற்றும் சகல தற்போதைய ஊழியர்களின் பணிகளைத் தொடர்வதற்கு ;

வாடிக்கையாளர்களுடனான வழமையான அலுவல்களுக்கு செலான்வங்கி பிஎல்சி 30.12.2008அன்று திறந்திருக்கும்.

செலான் வங்கியுடன் அவர்களுடைய வழமையான நிதியியல் கொடுக்கல் வாங்கல்களைத் தொடரவேண்டுமென மத்திய வங்கியின் நாணயச்சபை பொது மக்களுக்கு அறிவிக்க விரும்புவதுடன் நாணயச்சபை வைப்புக்களின் பாதுகாப்புக்கும் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டுக்கும் பொதுமக்களுக்கு உறுதியளிக்கின்றது.

PDF created with FinePrint pdfFactory trial version http://www.pdffactory.com